**ஏப்ரல் – 23**

# TNPSC துளிகள்

- பெங்களூருவை மையமாக கொண்ட வால்மார்ட் முதலீடு செய்த ஒரு மின்னணு வர்த்தக நிறுவனமான பிளிப்கார்ட் நிறுவனம் கிளியர்டிரிப் (Cleartrip) எனப்படும் ஒரு பயணப்பதிவு தளத்தினை 40 பில்லியன் டாலருக்கு வாங்க திட்டம் தீட்டியுள்ளது.
- ஸ்ரீநகரைச் சேர்ந்த சோலிஹா சபீர் அவரது பெயரை இந்தியாவின் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற செய்துள்ளார்.
  - இவர் ஹப்பா கட்டூன்ஸ் கவிதைக்கு (Zoon Book - சூன் புத்தகம்) புத்துயிர் அளித்த ஜம்மு & காஷ்மீரைச் சேர்ந்த இளம் மற்றும் முதல் நூல் ஆசிரியர் ஆவார்.
- தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளி நீரவ் மோடியை அந்த நாட்டிலிருந்து வெளியேற்ற ஐக்கிய ராஜ்ஜிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
  - இவர் பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ. 14000 கோடிக்கும் மேலான மோசடியினை செய்துள்ளார். இதுவரை நடந்ததில், இதுதான் இந்தியாவின் மிகப்பெரிய மோசடி ஆகும்.
- "Believe – What Life and Cricket Taught Me" என்று தலைப்பிடப்பட்ட சுரேஷ் ரெய்னாவின் சுயசரிதைப் புத்தகம் வெளியாக உள்ளது.
  - இந்தப் புத்தகம் சுரேஷ் ரெய்னா மற்றும் விளையாட்டுத் துறை நூலாசிரியர் பரத் சுந்தரேசன் ஆகியோரால் இணைந்து எழுதப்பட்டது.
- தாஸ்கண்ட்டில் நடைபெற்ற ஆசிய பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 49 கிலோகிராம் எடைப் பிரிவில் வெற்றி பெற்று மீராபாய் சானு புதிய உலக சாதனைப் படைத்துள்ளார்.
  - இப்போட்டியில் இவர் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- அமெரிக்காவின் நாசா நிறுவனம் தனது ஆர்டெமிஸ் திட்டத்திற்காக எலான் மஸ்கினுடைய ஸ்பேஸ் X (Space X) நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.
  - இந்நிறுவனம் முதல் வணிகரீதியிலான தரையிறங்கு விண்கலத்தை உருவாக்க உள்ளதோடு 2024 ஆம் ஆண்டிற்குள் அடுத்த இரண்டு அமெரிக்க விண்வெளி வீரர்களை நிலவுவிற்கு கொண்டு செல்லவும் உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## கீழடியில் டெரகோட்டா பகடைகள்

- ஆறு பக்கங்களையுடைய டெரகோட்டா (மெருகூட்டப்படாத மட்பாண்டப் பொருள்) பொருளாலான பகடை மற்றும் கிரானைட்டினாலான விவசாயக் கருவிகள் ஆகியவை கீழடியில் நடைபெறும் ஏழாம் கட்ட அகழாய்வில் கண்டெக்கப்பட்டுள்ளன.
- இந்த ஏழாம் கட்டத்தில், கீழடியில் மூன்று அகழிகளிலும் கொந்தகையில் மூன்று அகழிகளிலும் மற்றும் அகரத்தில் ஒரு அகழியிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- கருப்பு மற்றும் செந்நிறத்திலான மட்கல உடைசல்கள் மற்றும் கிரானைட்டாலான கலப்பை போன்ற விவசாயக் கருவிகளின் பாகங்கள் ஆகியவையும் இங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- இரு வெவ்வேறு பொருட்களாலான பகடைகள் சமுதாயத்தில் வெவ்வேறு பிரிவுகள்

இருந்ததையும் (செல்வம் படைத்தவர்கள் தந்தத்திலான பகடையை டெரகோட்டா என்பதினால் ஆன பகடையை ஏழை மக்களும் பயன்படுத்தினர்) மேலும் இந்நாகரீகத்தினர் எண் கணிதம் சார்ந்த அறிவையும் வளர்த்து வந்தனர் என்பதையும் இது குறிக்கிறது.



## தேசியச் செய்திகள்

### Transport 4 All (T4All) சவால்

- வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது போக்குவரத்து மற்றும் மேம்பாட்டுக் கொள்கை நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- அனைத்து குடிமக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நோக்கில் பொதுப் போக்குவரத்தினை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை உருவாக்கிட வேண்டி நகரங்கள், குடிமக்கள் குழுவினர் மற்றும் தொடக்க நிறுவனங்களை ஒன்றிணைப்பதே இதன் நோக்கமாகும்.
- அனைத்துப் பொலிவுறு நகரங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களின் தலைநகரங்கள் மற்றும் 5 லட்சத்திற்கும் மேலான மக்கள் தொகை உடைய அனைத்து நகரங்களும் இந்த சவாலிற்கு தகுதியானவையாகும்.

### பாலின சாம்வாத்

- பாலின சாம்வாத் (Gender Samvaad) என்பது தீனதயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் மற்றும் Initiative for What Works to Advance Women and Girls in Economy (பொருளாதாரத்தில் பெண்களையும் சிறுமிகளையும் மேம்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதற்கான முன்னெடுப்பு) எனப்படும் திட்டத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இம்முயற்சியிலிருந்துப் பெறப்படும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள ஒரு பொதுவான தளத்தினை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- தீனதயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழான பாலினம் சார்ந்த நடவடிக்கைகள் குறித்து பெரிய அளவில் ஒரு விழிப்புணர்வை உருவாக்குவதே இம்முயற்சியின் நோக்கமாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## தேசிய காலநிலைப் பாதிப்பு அறிக்கை

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையானது சமீபத்தில் தேசிய காலநிலைப் பாதிப்பு அறிக்கையினை வெளியிட்டது.
- இந்த அறிக்கை தற்போதைய காலநிலை அபாயங்கள் மற்றும் பாதிப்பை ஏற்படுத்தும் முக்கியக் காரணிகள் ஆகியவற்றைப் பொறுத்து இந்தியாவில் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களை அடையாளம் காணுகிறது.
- இந்த அறிக்கையின் படி, நாட்டின் எட்டு கிழக்கு மாநிலங்கள் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படக் கூடும்.
- அவை மிசோரம், பீகார், மேற்கு வங்காளம், அருணாச்சலப் பிரதேசம், சத்தீஸ்கர், ஒடிசா, ஜார்க்கண்ட் மற்றும் அசாம் ஆகியனவாகும்.
- அசாம், ஜார்க்கண்ட் மற்றும் பீகார் ஆகியவை 60%க் என்ற அளவிற்கும் மேலான “அதிகம் பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்கள்” எனும் பிரிவினைச் சேர்ந்த மாவட்டங்களைக் கொண்டு உள்ளன.
- ஜார்க்கண்ட் 0.67 எனும் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- ஜார்க்கண்ட்டை அடுத்து மிசோரம், ஒடிசா, சத்தீஸ்கர், அசாம், பீகார் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியவை இக்குறியீட்டில் இறங்குவரிசையில் உள்ளன.
- இவை “ஒப்பீட்டளவில் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்கள்” என பெயரிடப் பட்டு உள்ளன.
- மகாராஷ்டிரா 0.42 என்ற மிகக்குறைவான பாதிப்புக்குள்ளாகும் குறியீட்டு அளவினைப் பெற்றுள்ளது.
- மகாராஷ்டிராவைத் தவிர கோவா, கேரளா, தமிழ்நாடு ஹரியானா ஆகிய மாநிலங்கள் மிகவும் குறைவான பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்களாக உள்ளன.
- இவை “மிகவும் குறைவான பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்கள்” எனப் பெயரிடப் பட்டு உள்ளன.

| | Vulnerability Indices | Ranking | Relative Vulnerability Category | Quartile (Q)-based categorisation of the vulnerability of states |
|---|---|---|---|---|
| Jharkhand | 0.674 | 1 | High vulnerability | Top 25% most vulnerable states (QI) |
| Mizoram | 0.645 | 2 | High vulnerability | Top 25% most vulnerable states (QI) |
| Orissa | 0.633 | 3 | High vulnerability | Top 25% most vulnerable states (QI) |
| Chhattisgarh | 0.623 | 4 | High vulnerability | Top 25% most vulnerable states (QI) |
| Assam | 0.620 | 5 | High vulnerability | Top 25% most vulnerable states (QI) |
| Bihar | 0.614 | 6 | High vulnerability | Top 25% most vulnerable states (QI) |
| Arunachal Pradesh | 0.594 | 7 | High vulnerability | Top 25% most vulnerable states (QI) |
| West Bengal | 0.592 | 8 | High vulnerability | Top 25% most vulnerable states (QI) |

## லைரைடு விண்கல் பொழிவு

- இது ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதத்தில் ஏற்படும்.
- இந்த விண்கல் பொழிவின் பிரகாசமான பகுதி லைரா விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ளது.
- விண்கல் பொழிவின் பிரகாசமான பகுதி (radiant) என்பது விண்கற்கள் விழத்

தொடங்கும் பாதையின் ஒரு புள்ளி ஆகும்.

- இது ஒரு நடுத்தர வலுவுடைய விண்கல் பொழிவு என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இவை C/1861G1 தாட்சர் எனப்படும் ஒரு வால்நட்சத்திரம் விட்டுச் சென்ற தூசுப்படலம் அல்லது குப்பைகளால் உருவாக்கப் படுகின்றன.
- இதனை வட துருவத்திலிருந்து நன்கு பார்க்க இயலும்.
- புவியானது வால்நட்சத்திரத்தின் பாதையைக் கடக்கும் போது இந்த விண்கல் பொழிவு ஏற்படும்.
- புவியானது அதன் அருகில் செல்லும் போது வால்நட்சத்திரத்தின் (Comet) எஞ்சிய பகுதிகள் புவியின் ஈர்ப்பு சக்தியினால் ஈர்க்கப்படும்.
- இவை புவியின் ஈர்ப்பு விசையினால் ஈர்க்கப் படுவதால் புவியை நோக்கி நகரத் தொடங்கும்.
- அப்போது புவியின் வளிமண்டலத்தால் உருவாக்கப்படும் உராய்வின் காரணமாக அவை தீப்பற்றி எரியும்.
- இந்த எரியும் எஞ்சிய பாறைகள் இரவு வானில் ஒரு ஒளிக்கற்றை போன்று தோற்றம் அளிக்கும்.
- இவை விண்கல் பொழிவு எனப்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### ரால் காஸ்ட்ரோ – கியூபா



- ரால் காஸ்ட்ரோ (89) ஆளும் கியூப நாட்டு கம்யூனிச (பொதுவுடைமை) கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகியுள்ளார்.
- இவர் வெளியேறியதுடன் கியூபாவில் 1959 ஆம் ஆண்டிலிருந்துத் தொடங்கிய கிட்டத்தட்ட 60 ஆண்டுகால குடும்ப அரசியல் முடிவுக்கு வந்தது.
- எனவே, 60 ஆண்டுகளில் முதல்முறையாக கியூபாவின் சமதர்மவாத (சோசலிச) அரசில் காஸ்ட்ரோவின் தலைமை இனி இருக்காது.
- இரண்டு முறை கியூபாவின் அதிபராக பணியாற்றிய ரால் காஸ்ட்ரோ 2018 ஆம் ஆண்டில் அப்பொறுப்பில் இருந்து விலகினார்.
- இவர் அதிபர் பொறுப்புகளை 2018 ஆம் ஆண்டில் 60 வயதான மிகுவல் டையாஸ் கேனலிடம் (Miguel Diaz-Canel) ஒப்படைத்தார்.

- டையாஸ் கேனல் கம்யூனிஸ்ட் கட்சியின் அடுத்த புதிய பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப் பட உள்ளார்.

***பின்னணி***

- பிடல் காஸ்ட்ரோ 50 வருடங்களுக்குக் கியூபாவை வழி நடத்தினார்.
- அவர் தனது சகோதரர் ராவுடன் இணைந்து 1959 ஆம் ஆண்டில் சர்வாதிகாரியான புல்ஜென்சியோ படிஸ்டாவினை (Fulgencio Batista) பதவியிலிருந்து வெளியேற்றினார்.
- பிரிட்டன் அரசி எலிசபெத் மற்றும் தாய்லாந்தின் அரசர் பூமிபோல் அதுல்யதேஜ் ஆகியோரையடுத்து நீண்ட நாட்கள் ஆட்சி செய்த உலகின் மூன்றாவது அதிபர் இவராவார்.
- 2011 ஆம் ஆண்டில் பிடல் காஸ்ட்ரோவையடுத்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக ரால் பொறுப்பேற்றார்.
- இவர் 2014 ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் சில ஒப்பந்தங்களை மேற்கொள்ள கியூபாவின் சமதர்மவாத அரசினை வழி நடத்தினார்.
- இது 1960 ஆம் ஆண்டிலிருந்து முதன்முறையாக அமெரிக்காவிற்கு கியூபாவின் பொருளாதாரத்தில் நுழைய அனுமதியளித்தது.

# முக்கிய தினங்கள்


## புவி தினம் – ஏப்ரல் 22

- ஐ.நா.வின் பொதுச் சபை 2009 ஆம் ஆண்டில் இத்தினத்தினை சர்வதேச புவி அன்னை தினமாக அறிவித்தது.
- இது உலகின் மிகப்பெரிய சுற்றுச்சூழல் இயக்கமாகும்.
- இது 1970 ஆம் ஆண்டில் முதன்முதலில் தொடங்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டிற்கான புவி தினத்தின் கருத்துரு, “நமது பூமியினை மீட்டெடுப்போம்” (Restore Our Earth) என்பதாகும்.



## சர்வதேச தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பத்தில் பெண்கள் தினம் – ஏப்ரல் 22

- இத்தினம் ஐ.நாவின் சர்வதேச தொலைதொடர்பு ஒன்றியத்தினால் உருவாக்கப்பட்டது.
- இந்த உலகளாவிய இயக்கம் பெண்களை ஊக்குவிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது.
- இது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள பெண்களுக்கு ஊக்கமளிக்கிறது.
- இந்த ஆண்டு இத்தினத்தின் 10வது ஆண்டு நிறைவாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Connected Girls, creating Brighter Futures" (இணைக்கப் பட்ட சிறுமிகள், பிரகாசமான எதிர்காலத்தினை உருவாக்குதல்) என்பது ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★